Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 169/2023** |
| Deposition of witness for | :: | **PW. 7** |
| Name | :: | **முத்துக்குமார் ( சார்பு ஆய்வாளர் )** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**11.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது விருதுநகர் பஜார் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.07.2022 ம் தேதி நான் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அருப்புக்கோட்டை கனம் குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து Crl MP. No. 2750/2022 ன்படி வரப்பெற்ற புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 159/2022 பிரிவுகள் 294(ஆ), 448, 406(1), 354 இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **( முதல் தகவல் அறிக்கை அசாஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

2. பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்று காலை 11.00 மணிக்கு சம்பவ இடமான அருப்புக்கோட்டை நெசவாளர் காலனி 11 வது தெருவில் உள்ள புகார்தாரர் சுப்புத்தாய் வீட்டின் அருகே சென்று சாட்சிகள் சீனிவாசன், சின்னகருப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** பின்னர் அன்றைய தினம் புகார்தாரர் சுப்புத்தாய் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான சீனிவாசன், சின்னகருப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் வழக்கின் விசாரணையில் 15.07.2022 ம் தேதி சாட்சிகள் பிரியா, புவனேஸ்வரி, பாசம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் 07.08.2022 ம் தேதி சாட்சி ரவிச்சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையில் புகார்தாரர் சுப்புத்தாய் எதிரி ராமரிடம் ரூபாய் 20 இலட்சம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக அவருடைய வீட்டு பத்திரத்தை எதிரிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்ததாகவும் சம்பவ நாள் வரையில் பணத்தை திருப்பி கொடுக்காமல் பவர் பத்திரத்தை ரத்து செய்தது தொடர்பாக எதிரி புகார்தாரரிடம் சென்று கேட்டபோது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதை தவிர வேறு பிரச்சனை ஏதுவும் நடைபெறவில்லை என தெரியவந்தது.

6. மேலும் இவ்வழக்கின் புகார்தாரர் தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிபிரிவிற்கு ஆஜர் எதிரி மீது கொடுத்த மனுவானது நடப்புதாள் N.Ref. TN/Home exc/VNR/1/CM−Cell தேதி 26.02.2022/3188931 பிரகாரம் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் இவ்வழக்கின் எதிரி ராமர் என்பவரை விசாரிக்க புகார்தாரர் அவருடைய குடும்ப செலவிற்காக ரூ. 20 இலட்சம் எதிரியிடம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக புகார்தாரரின் வீட்டு பத்திரத்தை எதிரிக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்ததாகவும் மேற்படி தொகையை தராமல் புகார்தாரர் எதிரிக்கு கொடுத்த பவர் பத்திரத்தை ரத்து செய்துவிட்டதாகவும் அதனை ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று எதிரி கேட்டதாகவும் அதற்கு எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்று எழுத்து மூலமாக எழுதி கொடுத்துள்ளார். ஆனால் மேற்படி ஆவணத்தை இவ்வழக்கு கோப்புடன் இணைக்கவில்லை.

7. மேலும் இவ்வழக்கில் எனது புலன் விசாரணை மற்றும் ரகசிய

விசாரணையில் இருந்தும் எதிரி ராமர் என்பவர் 17.02.2022 ம் தேதி காலை 09.00 மணிக்கு புகார்தாரரின் வீட்டிற்கு சென்று பணத்தை திருப்பி தராமல் ஏன் பவரை ரத்து செய்தீர்கள் என்று கேட்டு வாக்குவாதம் செய்துள்ளார் என்பதும், மேற்படி புகாரில் கூறியுள்ளவாறு வேறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்பதும் புகார்தாரர் புகாரில் மிகைப்படுத்தி கூறியுள்ளார் என்பதும் தெளிவாக புலனாதல் வழக்கின் சங்கதியை பொருத்தமட்டில் பிழையுடையதாக கருதி ( Mistake of Fact) வழக்கின் மேல்நடவடிக்கை நிறுத்தம் செய்து குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாகவே புகார்தாரர் கொடுத்த புகாரினை விசாரணை செய்து அதில் உண்மைதன்மை இல்லை என்று மேல் நடவடிக்கை நிறுத்தம் செய்துவிட்டேன் என்றாலும் அதன்பின்னர் நீதிமன்றத்தில் இருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் தான் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு விசாரணையின்போது இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் எதிரியிடமிருந்து 20 இலட்சம் ரூபாய் கடனாக பெற்று கொண்டு புகார்தாரருக்கு பாத்தியப்பட்ட வீட்டினை 3ம் நபருக்கு கிரையம் செய்து கொடுக்கும்படி எதிரிக்கு பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்த விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான். மேற்படி பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்த அன்றே புகார்தாரரின் வீட்டின் அசல் கிரைய பத்திரத்தின் அசலானது எதிரியிடம் கொடுக்கப்பட்டது என்றாலும் விசாரணையின்போது எதிரி மேற்படி பத்திரத்தை என்னிடம் காண்பித்தார் என்றாலும் சரிதான்.

2. புகார்தாரர் புகாரில் சம்பவத்தை பார்த்ததாக குறிப்பிட்டுள்ள நபரான ரவிசந்திரனை நான் விசாரணை செய்தபோது அவர் புகாரில் கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், புகாரில் கூறியுள்ளவாறு எந்தவொரு சம்பவத்தையும் அவர் நேரடியாக பார்க்கவில்லை என்றும் என்னிடம் கூறினார் என்றால் சரிதான். புகார்தாரரின் வீட்டிற்கு அருகில் உள்ள சாட்சிகளான பிரியா, புவனேஸ்வரி, பாசம் ஆகியோர்களை நான் விசாரணை செய்தபோது புகாரில்

கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று தான் கூறினார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

**இல்லை**